* சுற்றுச்சுழல் பாதிப்பினை உணர்த்தும் உயிர் காட்டிகளாக லைக்கன்கள் விளங்குகின்றன.

* பூஞ்சைகளுக்கு எ.கா: ஈஸ்ட் (ஒற்றைச் செல்லால் ஆனவை), ரைசோபஸ்,அகாரிகஸ், அஸ்பர்ஜில்லஸ் (பல செல்களாலானவை)

* பூஞ்சைகளின் வகைப்பாடு:
1. சைகோமைகோட்டா (ரொட்டி காளான்)
2. ஆஸ்கோமைகோட்டா (கோப்பை பூஞ்சை)
3. பெசிடியோமைகோட்டா (கணுவடி பூஞ்சை)
4. யுடெரோமைகோட்டா(பெனிசிலியம்)

* உணவூட்ட அடிப்படையில் பூஞ்சைகளின் வகைகள் மூன்று
1. ஒட்டுண்ணிகள்(எ.கா: பக்சீனியா)
2. சாறுண்ணிகள் எ.கா: ரைசோபஸ், அகாரிகஸ்
3. கூட்டுயிரிகள்

* அதிக அளவு பரவலாக உண்ணப்படும் காளான்கள் பொத்தான் காளான்களாகும்.

* உண்ணத் தகுந்த காளான்கள் -அகாரிகஸ் கம்பெஸ்ட்ரில், அகாரிகஸ் பைஸ்போரஸ்.

* நச்சுத்தன்மை உள்ள காளான்கள்- அமானிடா மஸ்காரியா, அமானிடா பல்லோய்ட்ஸ்.

* வைட்டமின் பி தயாரிப்பில் பயன்படும் பூஞ்சைகள்- அஸ்ஃப்யா காஸிப் மற்றும் எரிமோதீசியா அஸ்ஃப்.

* பூஞ்சை நோய்கள்:

மனிதன்: மைகோசஸ், பாதப்படை, படர் தாமரை.

விலங்குகள்: எர்காட், பாதப்படை

தாவரங்கள்: கருப்பழுகல், கறும்புள்ளி,கன்கர்

* பிளான்டே (தாவர உலகம்)

1. பூவாத தாவரங்கள்: அ. பாசிகள் ஆ.பிரயோபைட்டுகள் இ.டெரிட்டோபைட்டுகள்.

2. பூக்கும் தாவரங்கள்: அ. ஜிம்னோஸ்பெர்ம்கள் ஆ. அஞ்சியோஸ்பெர்ம்கள்.

* கலிபோர்னியை இராட்சத் கெல்ப் என்பவை -ஒரு பழுப்பு நிறகடல்பாசிகளாகும்.

* கலிபோர்னியா இராட்சத கெல்ப் எனும் ஒரு பழுப்பு நிற கடல்பாசிகள்
ஒருநாளிற்கு சுமார் 15 செமீ வளர்ந்து
ஒரு வருடத்தில் சுமார் 50மீ(160 அடி) நீளம்வரை அடையக்கடியது.

* உலகில் மிக வேகமாக வளரும் கடல் களை கலிபேர்னியா இராட்சத கெல்ப் எனும் ஒரு பழுப்பு நிற கடல்பாசிகள்.

* கரியமில வாயு மற்றும் உடலின் மற்ற கழிவுகளை நீக்கவும் மனிதன் சிறுநீரை சிதைக்கவும் விண்வெளிப் பயணங்களில் பயன்படுத்தப்படும் பாசி - குளோரெல்லா பைரெனோய் டோஸா.

* ஸ்பாக்னம் மாஸ் ஒரு காலத்தில் குழந்தைகளுக்கு ஒரு முறை மட்டும் பயன் படுத்தும் கால்சட்டையாகப் பயன்படுத்தப்பட்டது.

* சாற்றுக் குழாய் கற்றையைப் பெற்று முதன் முதலில் நிலத்தில் வாழும்திறனைப் பெற்று பூவாத தாவரங்கள் பெரணிகள் ஆகும்.

* பூக்கும் தாவரங்களின் ஒரு மிகப்பெரிய தொகுதி – ஆஞ்சியோஸ்பெர்ம்.

* ஆஞ்சியோஸ்பெர்ம் ஏறக்குறைய 26,000 உயிர் வாழ் தாவரங்களைக்கொண்டது.

* தன்னுடைய விதையினுள் ஒரே ஒரு வித்திலையைக் கொண்ட தாவரங்கள் ஒரு வித்திலைத் தாவரங்கள் என அழைப்படுகின்றன.
எ.கா: புல், நெல்,சோளம்.

* தன்னுடைய விதையினுள் இரண்டு வித்திலையைக் கொண்ட தாவரங்கள் இரு வித்திலைத் தாவரங்கள் என அழைக்கப்படுகின்றன.
எ.கா: அவரை,பட்டாணி, மா.

* வேரின் புறத்தோல் ரேசோடெர்மிஸ் எனப்படும்.

* வேரின் மையப்பகுதி பித் எனப்படும்( ஒரு வித்திலை தாவரத்தில் மட்டும் உள்ளது).

* பசுமை மாறாத அழகு தாவரம் அரக்கேரியா (குரங்கின் புதிர்).

* பனை போன்ற சிறிய ஜிம்னோஸ்பெர்ம் சைகஸ்.

* கூல்கள் பூப்போன்ற தண்டின்மீது திறந்த நிலையில் உள்ளஜிம்னோஸ்பெர்ம் – நீட்டம்.

* வைரஸ் என்ற வார்த்தை இலத்தீன் மொழியிலிருந்து எடுக்கப்பட்டது.

* வைரஸ் என்பதன் பொருள் நஞ்சு.

* வைரஸை முதன் முதலில் ரஷ்யாவைச் சேர்ந்த தாவரவியல் அறிஞர் ஐவனோஸ்கி 1892 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

* வைரஸ்கள் எந்த உயிரியைத் தாக்கி அதனுள் தன்னைப் பெருக்கிக் கொள்கிறதோ அது விருந்தொம்பி செல் என்று அழைக்கப்படுகிறது.

* பாலைத் தயிராக மாற்றும் பாக்டீரியா லாக்டோ பாசில்லஸ்

* நைட்ரஜனை நிலை நிறுத்தும் பாக்டீரியாக்கள் எ.கா: அசட்டோபாக்டர், கிளாஸ்டிரியம், ரைசோபியம், நீலப்பச்சை பாசிகளான ஆசிலட்டோரியா,அனபீனா, நாஸ்டாக்.

* விருந்தோம்பியின் அடிப்படையில் வைரஸ்களின் ஐந்து வகைகள்:

1.பாக்டீரியோபேஜ்
2. பைட்டோபேஜ் (தாவர வைரஸ்கள்)
3. பைகோ பேஜ் (பாசிவைரஸ்கள்)
4. சூபேஜ் (விலங்கு வைரஸ்கள்)
5. மைக்கோ பேஜ் (பூஞ்சைவைரஸ்கள்)

* ஒரு செல்லால் ஆன நுண்ணுயிரி – பாக்டீரியா

* பாக்டீரியாவைக் குறித்த அறிவியல் – பாக்டீரியாலஜி

* பாக்டீரியாவின் செல் - புரோகேரியோட்டிக் செல்

* பாக்டீரியாவை மைக்ரான் என்ற அலகால் அளக்கலாம்

* 1 மைக்ரான் - 1/1000மிமீ

* பாக்டீரியாவின் வடிவத்தை வைத்து அதன் நான்கு வகைகள்:

1. காகாகஸ்(உருளை வடிவம்)

2. பேசில்லஸ் (குச்சி வடிவம்)

3.ஸ்பைரில்லம் (சுருள்வடிவம்)

4. விப்ரியோ (கால்புள்ளி வடிவம்)

* கசையிழைகளின் எண்ணிக்கை அமைவு முறையின் அடிப்படையில் பாக்டீரியங் களின் வகைகள்:

1. ஒற்றைக் கசையிழை வகை

2. இருமுனைக்கசையிழை வகை

3. ஆஸ்ட்ரிகஸ்(கசையிழைகளற்றவை)

4. ஒரு கற்றைகசையிழை வகை

5. பெரிட்ரைகஸ் கசையிழை வகை

* கிளாமிடோமோனாஸ் என்பன எளிய ஒரு செல்லால் ஆன பச்சை நிறபாசிகள் ஆகும்.

* பாசிகளைக் குறித்த அறிவியல் – பைக்காலஜி

* ஒரு செல்லாலான சாறுண்ணி வகைப் பூஞ்சை – ஈஸ்ட்

* பெனிசிலினை பிரிட்டன் நாட்டைச் சார்ந்த அலெக்ஸாண்டர் பிளெம்மிங் 1928-ல் கண்டுபிடித்தார்.

* அமொனியாவை நிலைநிறுத்தும் பாக்டீரியா - பாசில்லஸ் ரமோஸஸ்

* தொழிற்சாலைத் துறையில் பெரும்பங்காற்றும் பாக்டீரியா - லாக்டிக் அமில பாக்டீரியா.

* பாக்டீரியாக்களால் ஏற்படும் தீங்குகள்: தீங்குயிரியின் பெயர் - நோய்கீழ்கண்டவாறு:

சாந்தோமோனாஸ்சிட்ரி - சிட்ரஸ் கேன்சுர்.

சோடோமோனாஸ் - வில்ட் நோய் – உருளைக்கிழங்கு.

சொலரனாசீயாரம் - பாக்டீரியல் பிளைட் – நெல்.

சாந்தோமோனாஸ்ஒரைசே - பாக்டீரில் பிளைட் – நெல்.

* பூஞ்சைகளால் ஏற்படும் நோய்கள்

செர்கோஸ்போரா பெர்சனேட்டா - டிக்கா நோய் – வேர்க்கடலை.

செர்கோஸ்போரா அராசிகிடிக்கோலா - டிக்கா நோய் – வேர்க்கடலை.

பைரிகுலோரியா ஒரைசா - வெப்ப நோய் – நெல்.

* வைரஸ்ஸால் ஏற்படும் நோய்கள்

உச்சிக் கொத்து வரைஸ் - வாழையில் உச்சிக்கொத்து நோய்.

புகையிலை பல வண்ண வைரஸ் - புகையிலையில் பல வண்ண நோய்.

வெள்ளரி பல வண்ண வைரஸ் - வெள்ளரியில் பல வண்ண நோய்.

* தீங்குயிரிகளால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள்

வைரஸ் - சாதாரண சளி, போலியோ, மஞ்சள் காமாலை, எய்ட்ஸ்,இன்புளுயென்சா - இவை காற்று, நீர் மற்றும் நேரடித் தொடர்பு,பாலியல்தொடர்பு மூலம் பரவுகின்றன.

பாக்டீரியா - காலரா, டைபாய்டு, டென்னஸ் எலிக்காய்ச்சல் தொழுநோய் - அசுத்தமான நீர், காயங்கள், விலங்குகளின் சிறுநீர், நேரடித் தொடர்புகள்மூலம் பரவுகின்றன.

பூஞ்சைகள் - பாதத்துடிப்பு நோய் - ஸ்போர்கள் நிலம், தண்ணீர் மூலம்பரவுகின்றன.

* ஒரு செல் உயிரிகள் - மலேரியா - நோய்ப் பரப்பி (எ.கா: கொசுக்கள்)

* பாக்டீரியாக்கள் இரட்டைப் பிளவு முறையில் தன் இனத்தைப் பெருக்கிக் கொள்கிறது.

* பூஞ்சைகள் ல்போர்கள் மூலம் தன் இனைத்தைப் பெருக்கிக் கொள்கிறது.

* தாவரம், விலங்குகள் மற்றும் மனிதர்களிடம் நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்களை அதன் காரணங்களையும் பற்றி அறியும் அறிவியல் பிரிவுநோய்யியல் செல் கொள்கையை உருவாக்கியவர்கள் ஜேக்கப் ஸ்லீடன், தியோடர்ஸ் சிவான்(1838-ல்).

* செல்களும் அதன் வடிவங்களும்:

நரம்பு செல் – நட்சத்திரம்.

சுடர் செல் – குழல்.

சுரப்பி செல் – கனசதுரம்.

தட்டு எபிதீலியம் – பல்கோணம்.

தூண் எபிதீலியம் – உருளை.

அண்ட செல் – முட்டை.

இரத்தச் செல்கள் – வட்டம்.

தசை செல்கள், நார் செல் - நீள் வடிவம்.

செல்லின் சைட்டோபிளாசத்தில் பரவிக் காணப்படும் உயிருள்ளபொருள்களுக்கு செல் நுண்ணுறுப்புகள் என்று பெயர்.

* எண்டோபிளாஸ்மிக் வலைப்பின்னலைக் கண்டறிந்தவர் - போர்ட்டர் (1945-ல்).

* எண்டோபிளாஸ்மிக் வலைப்பின்னல் எனப் பெயரிட்டவர் - போர்ட்டர் (1945-ல்).

* சில மனித செல்களும் அவற்றின் பணிகளும்

தட்டு எபிதீலியம் - வடிவம் மற்றும் பாதுகாப்பு.

தசை செல்கள் - சுருங்கி விரிதல்.

கொழுப்பு செல்கள் - கொழுப்புகளைச் சேமிக்க.

நரம்பு செல்கள் - நரம்புத் தூண்டலைக் கடத்தல்.

எலும்பு செல்கள் - உறுதி மற்றும் உடலைத் தாங்கவும்.

கூம்பு மற்றும் குச்சி செல்கள் - பார்வை மற்றும் நிறத்தை உணர .

நத்தை கூடு செல்கள் - ஒலி அலைகள் உணர்வதற்கு.

சுரப்பி செல் – சுரத்தல்.

* வேதியில் அமைப்பினை ஆராய்ந்து 2009-ல் வேதியியலுக்கான நோபல்பரிசை பெற்ற மூன்று அறிவியல் அறிஞர்கள்
1,வெங்கட்ராமன்ராமகிருஷ்ணன்(இந்தியா),
2,தாமஸ் ஸ்டெய்ஸ்(அமெரிக்கா),
3,அடாயத்(இஸ்ரேல்).

* செல்லின் முக்கிய துணை நுண்ணுருப்பு – உட்கரு.

* இரத்த செல்களின் மூன்று வகைகள்:

1. இரத்தச் சிவப்பு அணுக்கள்(எரித்ரோசைட்).

2. இரத்த வெள்ளை அணுக்கள் (லீயூகோசைட்டுகள்).

3.இரத்தத் தட்டுகள் (த்ரோம்போசைட்டுகள்).

* நமது உடலின் காவல் படை - இரத்த வெள்ளை அணுக்கள்.

* ஹீமோகுளோபின் எனும் சுவாச நிறமியைப் பெற்றுள்ள இரத்த செல் வகை

இரத்தச் சிவப்பு அணுக்கள்.

* உடல் முழுவதையும் தாங்கும் திசுக்கள் தாங்கு திசு.

* தாங்கும் திசுக்களின் 3 வகைகள்:

1. குறுத்தெலும்பு.

2. எலும்பு திசு.

3. வலைஇணைமத் திசு.

* நமக்கு உருவத்தைக் கொடுக்கக் கூடிய திசு - எலும்பு திசு

* குறுத்தெலும்பு திசுக்கள் காணப்படும் இடங்கள் மூட்டுகள் - காது மடல்,மூக்கு, மூச்சுக் குழல், குரல் வளை

* வலை இணைமத் திசுக்கள் காணப்படும் இடங்கள் – தோலுக்கும் தசைகளுக்கும் இடையில் இரத்த குழாய், நரம்புகள், எலும்பு மஞ்சைகள்

* தசைகளின் மூன்று வகைகள்:

1. வரித்தசைகள்(இயக்குதசை)

2. வரியற்றதசைகள்(இயங்கு தசைகள்)

3. இதய தசைகள்

* கண் கோளத்தின் மூன்று அடுக்குகள்:

1. வெளி அடுக்கு - விழி வெண் படலம்(ஸ்கிளிரா)

2. நடு அடுக்கு - விழியடிக்கரும் படலம்

3. உள் அடுக்கு -விழித்திரை (ரெட்டினா)

* கண்ணின் உணர்வுள்ள பகுதி – விழித்திரை.

* விழி வெண்படலத்திற்கும் விழிலென்சுக்கும் இடையே உள்ள திரவத்திற்குவிழி முன் அறை திரவம் என்று பெயர்.

* சிறுநீரகத்தின் அடிப்படை அலகு – நெப்ரான்.

* சிறுநீரகத்தின் நீள்வெட்டு தோற்றத்தில் கருஞ்சிவப்பு நிறம் கொண்டவளிப்பகுதி கார்டெக்ஸ் ஆகும்

* இரத்தத்தின் PH அளவை நிலை நிறுத்துவது - சிறுநீரகம்.

* கரிம மூலக் கூறுகளை ஆக்ஸிஜனேற்றம் செய்து வேதி ஆற்றலைப்பெறுதல் சுவாசித்தல் ஆகும்.

* காற்றில்லா சுவாசத்தின் மற்றொரு பெயர் – நொதித்தல்.

* கிரேக்க மொழியில் மெட்டபால் என்றால் மாற்றம் என்று பொருள்

* சிறகடித்து பறக்கக் கூடிய பாலூட்டி வௌவால்.

* இந்தியாவிலுள்ள காடுகளின் ஐந்து பெரும் வகைகள்:

1. பாலைவனம் (இராஸ்தான், பஞ்சாப், அரியானாவின் தென் பகுதிகள்)

2. வெப்பமண்டல் இலையுதிர்க் காடுகள்

3. வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள் (வடகிழக்கு மலைப்பகுதிகள், இமயமலை அடிவாரம்)

4. மலைக்காடுகள் (இமயமலை, தென்னிந்தியா)

5. அலையிடைக்காடுகள் (கங்கா மற்றும் மகாநதி கழிமுகப்பகுதிகள்)

* இந்தியாவில் உள்ள தாவர வகைகள் மற்றும் எண்ணிக்கை:

சிற்றினங்கள் – 45000

பூக்கும் தாவரங்கள் – 15000

பாசியினங்கள் – 1676

படர்தாவரங்கள் – 1940

பூஞ்சைகள் – 12480

திறந்த விதைத் தாவரங்கள் – 64

பிரியோடைட்டுகள் – 2843

டெரிடோபைட்டுகள் - 1012

* உலக விலங்கினங்களில் இந்தியாவில் உள்ள விலங்கினங்களின் சதவீதம் - 6.67

* இந்தியாவில் சமுதாயக் காடுகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1976

* பறவை மனிதன் என்று அழைக்கப்பட்டவர் - முனைவர் சலீம் அலி.

* புலி பாதுகாப்புத் திட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு -1973-ம் ஆண்டு ஏப்ரல் 1.

விலங்குகளின் வகைகள் மற்றும் எண்ணிக்கை

சிற்றினங்கள் - 81,251

பூச்சிகள் - 60,000

மெல்லுடலிகள் - 5,000

பாலூட்டிகள் – 372

பறவைகள் – 1228

ஊர்வன – 446

இரு வாழ்விகள் – 204

மீன்கள் – 2546

* பாக்டீரியங்களின் செல்சுவர் எதனால் ஆக்கப்பட்டது – பெப்டோகிளைக்கான்.

* செல்சுவரைச் சுற்றியுள்ள தடித்த உறையின் பெயர் – கேப்சூல்.

* பாலைப் புளிக்கச் செய்து தயிராக மாற்றும் பாக்டீரியா –லேக்டோபேசில்லஸ்.

* தோசை, இட்லி மாவைப் புளிக்கச் செய்து சுவை தரும் பாக்டீரியா – லுக்கோநாஸ்டாக்.

* பாக்டீரியங்கள் வடிவத்தின் அடிப்படையிலும், கசையிழைகளின்அடிப்படையிலும் எத்தனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன – நான்கு.

* பாக்டீரியாவினால் எலுமிச்சையில் ஏற்படும் நோய் - கேன்கூர் நோய் .

* பாக்டீரியாவினால் உருளையில் ஏற்படும் நோய் - வளைய அழுகல் நோய்.

* பாக்டீரியாவினால் ஆப்பிளில் ஏற்படும் நோய் - தீ வெப்ப நோய்.

* பாக்டீரியாவினால் தக்காளியில் ஏற்படும் - வாடல் நோய்.

* ஒரு செல் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அடங்கிய குழுமம் –புரோட்டிஸ்டா.

* சீலியாக்களைக் கொண்ட பாரமீசியம் - சீயோபோரா வகையைச் சார்ந்தது.

* கசையிழைகளைக் கொண்ட யூக்ளினா - மாஸ்டிக்கோபோரா வகையைச் சார்ந்தது.

* போலிக்கால்களைக் கொண்ட அமீபா சார்க்கோடைனா வகையைச்சார்ந்தது.

* ல்போர்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் பிளாஸ்மோடியம் –ஸ்போரோசோவா வகையைச் சார்ந்தது.

* மலேரியா நோயைப் பரப்பும் பிளாஸ்மோடியத்தின் முக்கியக் கடத்தியாக செயல் படுவது - பெண் அனோபீலஸ் கொசு.

* குளிர் மற்றும் நடுக்கம் அதைத் தொடர்ந்து காய்ச்சல், கடுமையான தலைவலி போன்றவை மலேரியா நோயின் அறிகுறிகள் ஆகும்.

* ஒரு செல்லாக உயிர் வாழ்கிற நுண்பாசிக்கு உதாரணம் –கிளாமிடோமோனஸ்.

* பெனிசியம், ஈஸ்ட் போன்ற பூஞ்சைகள் - ஆஸ்கோமைசீட்ஸ் பிரிவைச்சார்ந்தவை.

* மருந்துகளின் ராணி – பெனிசிலின்.

* ரொட்டி தயாரிக்கப் பயன்படும் பூஞ்சை – ஈஸ்ட்.

* நொதித்தல் முறையில் ஆல்கஹால் தயாரிக்கப் பயன்படும் பூஞ்சை – ஈஸ்ட்.

* உலகில் ஏறக்குறைய எத்தனை வகை தாவர இனங்கள் உள்ளதாககண்டறியப் பட்டுள்ளது - 4 லட்சம் இனங்கள்.

* பூவாத் தாவரங்களின் மறு பெயர் – கிரிப்டோகேம்கள்.

* பூக்கும் தாவரங்களின் மறு பெயர் – ஃபெனரோகேம்கள்.

* என்டிரோமார்ஃபா எனும் பாசியில் உள்ள சேமிப்பு உணவுப் பொருள் –ஸ்டார்ச்.

* கடல் களைகள் எனப்படும் பாசியின் பெயர் – சர்காசம்.

* சர்காசத்தில் காணப்படும் நிறமியின் பெயர் – பைக்கோசேந்தின்.

* சர்காசத்தில் காணப்படும் சேமிப்பு உணவு - லேமினேரியன் ஸ்டார்ச்.

* கிரினெல்லா என்ற சிவப்பு பாசியில் காணப்படும் நிறமி - பைக்கோ எரித்ரின்.

* கிரினெல்லாவில் உள்ள சேமிப்பு உணவுப் பொருள் – புளோரிடியன்.

* வாஸ்குலார் திசுவற்ற தாவரங்களுக்கு உதாரணம் - ரிகிசியா, ப்யுனேரியா

* வாஸ்குலார் திசு உள்ள பூவாத்தாவரங்களுக்கு உதாரணம் -செலாஜினெல்லா, நெப்ஃரோலெப்பிஸ்.

* வாஸ்குலார் திசுக்கள் என்பது - தாவரங்களில் நீர் மற்றும் உணவைக் கடத்தும் திசுக்கள்.

* வேரிலிருந்து நீரை, தண்டு மற்றும் வேருக்குக் கடத்தும் திசு – ஃபுளோயம்.

* ஜிம்னோஸ்பெர்ம் தாவரங்களுக்கு உதாரணம் - சைகஸ், பைனஸ்.

* தாவர உலகில் மிகப்பெரிய பிரிவு – ஆஞ்சியோஸ்பெர்ம்கள்.

* வைரசின் அளவு - 17 நானோமீட்டர் முதல் 300 நானோ மீட்டர் வரை.

* அமராந்தஸ் எவ்வகை தாவரம் - வாஸ்குலார் தாவரம்.

* திறந்த விதையைக் கொண்டவை எவ்வாறு வழங்கப்படுகிறது –ஜிம்னோஸ் பெர்ம்கள்.

* துளையுடலிகளுக்கு உதாரணம் – கடற்பஞ்சு.

* பவள பாறைகளை உருவாக்கும் விலங்குகள் எந்தத் தொகுதியில்காணப் படுகின்றன - குழியுடலிகள் (சீலன்டிரேட்டா).

* அன்னலிடா தொகுதியில் காணப்படும் சிறப்புப் பண்பு - மூடிய இரத்த ஓட்ட மண்டலம்.

* உழவனின் நண்பன் என அழைக்கப்படுவது – மண்புழு.

* கணுக்காலிகளின் புறச்சட்டகம் எதனால் அமைக்கப்பட்டது – கைட்டின்.

* கணுக்காலிகளின் இரத்தம் ஏன் வெள்ளை நிறமாக உள்ளது –ஈமோகுளோபின் இல்லாததால்.

* ஆக்டோபஸ் என்ற உயிரினம் உள்ள தொகுதி – மெல்லுடலிகள்.

* விலையுயர்ந்த முத்துக்களை உருவாக்கும் முத்துச் சிப்பியினம் இருக்கும்தொகுதி – மெல்லுடலிகள்.

* முட்தோலிகள் எதன் மூலம் இடப்பெயர்ச்சி அடைகின்றன - குழல் கால்கள்.

* பறக்கும் தன்மையற்ற பறவை - ஆஸ்ட்ரிச் எனப்படும் நெருப்புக்கொழி.

* பறக்கும் தன்மையற்ற பாலூட்டி – வௌவால்.

* மனிதனின் விலங்கியல் பெயர் – ஹோமோசேப்பியன்ஸ்.

* ஆந்த்ரோபாலஜி என்பது - மனித இனத்தைப் பற்றிப் படிக்கும் அறிவியல்பிரிவு.

* தாவரங்களின் புறத்தோற்றத்தைப் பற்றி விளக்கும் அறிவியல் பிரிவு -தாவர புற அமைப்பியல்.

வேர்த்தொகுப்பின் இரு வகைகள் - ஆணி வேர்த்தொகுப்பு, சல்லிவேர்த்தொகுப்பு.

* தாவரங்கள் நேர் புவிநாட்டம் கொண்டது – ஆண்வேர்த்தொகுப்பு.

* ஆஞ்சியோஸ்பெர்ம்களில் ஆணிவேர்த்தொகுப்பு இருவித்திலைதாவரத்தின் பண்பாகும்.

* விதை முளைக்கும்போது முளைவேர் முதன்மை வேராக வருவது -இருவித்திலை தாவரத்தின்வகையாகும்.

* ஒரு வித்திலைத் தாவரங்களின் சிறப்புப் பண்புகளில் ஒன்று சல்லிவேர்த்தொகுப்பு.

* சல்லி வேர்த்தொகுப்பிற்கு உதாரணம் - சோளம், கரும்பு, நெல்.

* மண் அரிப்பைத் தடுக்க பயன்படுவது – வேர்.

* வேரின் மாற்றுருக்கள் இரண்டு வகைப்படும்.

* வேரின் மாற்றுருக்கள் - ஆணிவேர் மாற்றுரு, சல்லிவேரின் மாற்றுரு.

* ஆணிவேரின் மாற்றுருக்கு எடுத்துக்காட்டு - கேரட், முள்ளங்கி, பீட்ரூட்.

* கூம்பு போன்று மேற்பகுதி அகன்றும், கீழ்பகுதி குறுகியும் காணப்படும்மாற்றுருக்கு உதாரணம் – கேரட்.

* நே∴பிபார்ம் வேருக்கு உதாரணம் – பீட்ரூட்.

* கதிர் கோல் வடிவ ஆணிவேரின் மாற்றுருக்கு உதாரணம் – முள்ளங்கி.

* தாவரத்தின் பிற பகுதியிலிருந்து வளரும் வேர்களின் பெயர் – வேற்றிடவேர்கள்.

* தூண் வேர்கள் காணப்படும் தாவரம் – ஆலமரம்.

* வேற்றிட வேரின் மாற்றுருக்களின் பணி - தாங்குதல், வளிமண்டல ஈரப்பத்ததை உறிஞ்சுதல்.

* தொற்றுத் தாவரத்திற்கு உதாரணம் – வாண்டா.

* தொற்றுத் தாவர வேர்களில் காணப்படும் பிஞ்சு போன்ற திசுவின் பெயர் – வெலாமன்.

* வெலாமன் திசுவின் பணி - வளிமண்டலத்தில் உள்ள ஈரத்தையும், மழைநீரையும் உறிஞ்சுதல்.

* விதையில் உள்ள முளைக் குறுத்து தண்டாக வளர்கிறது.

* இலைக்கும் மைய அச்சுக்கும் இடைப்பட்ட கோணம் – இலைக்கோணம்.

* நேர் ஒளி நாட்டம் உடையது – தண்டு.

* பசுமையான தண்டு எத்தன்மையை பெற்றுள்ளது - உணவு தயாரிக்கும்திறன்.

* பின்னுகொடிக்கு உதாரணம் – அவரை.

* தரையொட்டிய தண்டின் வகைகள் – நான்கு.

* தரையடித் தண்டின் வகைகள் – நான்கு.

* மண் பரப்பிற்குக் கீழே கிடைமட்டமாக வளரும் தண்டு – மட்டநிலத்தண்டு.

* மட்டநிலத்தண்டுக்கு உதாரணம் - இஞ்சி .

* நேர் செங்குத்தாக வளரும் நிலத்தடித் தண்டு – சேனை.

* கந்தம் என்பதற்கு உதாரணம் – சேனை.

* தண்டு கிழங்கிற்கு உதாரணம் – உருளைக்கிழங்கு.

* குழித்தண்டிற்கு உதாரணம் – வெங்காயம்.

* மலரைத் தாங்கிக் கொண்டிருக்கும் உறுப்பின் பெயர் – மலர்க்காம்பு.

* மலரின் வெளியடுக்கின் பெயர் - புல்லி வட்டம்.

* மலர் மொட்டாக இருக்கும்போது மலரைப் பாதுகாப்பது - புல்லி வட்டம்.

* மலரின் இரண்டாம் அடுக்கின் பெயர் - அல்லி வட்டம்.

* மலரின் மூன்றாம் வட்டத்தின் பெயர் - மகரந்தத்தாள் வட்டம்.

* மலரின் நான்காம் வட்டம் - சூலக வட்டம்.

* சூலக வட்டத்தின் மூன்று பாகங்கள் - சூல்பை, சூல்தண்டு, சூலக முடி.

* ஒளிச்சேர்க்கை செய்யக்கூடிய தண்டின் புறவளரி – இலை.

* இலைத்தாளிற்கு வலிமை கொடுப்பதோடு நீரினையும் உணவுப்பொருட்களையும் கடத்துவது – நரம்பமைவு.

* இலையை தாங்கி நிற்கும் கம்பி போன்ற பகுதியின் பெயர் – இலைக்காம்பு.

* சுவாசித்தல் வேலையைச் செய்யும் தாவர உறுப்பு – இலை.

* நீராவிப்போக்கு நடைபெறும் இடம் – இலை.

* இலையின் உள்ளமைப்பில் நீராவிப்போக்கினைக் கட்டுப்படுத்துவது – கியூட்டிக்கிள்.

* இலையின் மேற்புறத்தோல், கீழ்ப்புறத்தோல் எத்தனை அடுக்கால் ஆனது - ஒரே அடுக்கால்.

* இலைத்துளைகள் இலையின் எப்பகுதியில் காணப்படுகின்றன –இலையின் கீழ்ப்புறத்தோல்.

* இலைத்துளையைச் சூழ்ந்துள்ள செல்களின் பெயர் - காப்புச் செல்கள்.

* இலையில் வாஸ்குலார் கற்றை என்பது – நரம்பு.

* இலை இடைத் திசுவின் இரு பகுதிகள்- பாலிசேடு பாரன்கைமா, ஸ்பாஞ்சி பாரன்கைமா.

* தாவரத்தின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவது எச்செயலினால் – நீராவிப்போக்கு.

* நீராவிப்போக்கின் வகைகளின் எண்ணிக்கை – மூன்று.

* நீராவிப்போக்கு அதிகயளவில் நடைபெறுவது - இலைத் துளைநீராவிப்போக்கில்.

* மிகக் குறைந்த அளவில் நீராவிப்போக்கு நடைபெறுவது – லெண்டிசெல் நீராவிப்போக்கு.

* அதிக அளவில் நீராவிப்போக்கு இலைத்துளைகள் மூலமாகநடைபெறுகிறது என்பதை நிரூபிக்கும் சோதனை - மண் ஜாடி சோதனை.

* ஒளிச்சேர்க்கையின் போது உருவாகும் வேதிப்பொருள் - ஸ்டார்ச் (தரசம்).

* ஒளிச்சேர்க்கையின் போது வெளியிடப்படும் வாயு – ஆக்சிஜன்.

* ஒளிச்சேர்க்கைக்கு சூரிய ஒளி தேவை என்பதை நிரூபிக்கும் சோதனை - கேனாங்கின் ஒளித்திரைச் சோதனை.

* ஒளிச்சேர்க்கைக்கு கார்பன் டை ஆக்சைடு அவசியம் என்பதை நிரூபிக்கும் சோதனை - மோலின் அரை இலைச் சோதனை.

* ஆக்சிஜனை முழுமையாகப் பயன்படுத்தி ஸ்டார்ச்சை முழுமையாகசிதைத்து ஆற்றலைப் பெறும் சுவாசத்தின் பெயர் - காற்றுச் சுவாசம்.

* செல்லின் ஆற்றல் நிலையம் – மைட்டோகாண்டிரியா.

* உமிழ்நீரில் உள்ள நொதியின் பெயர் - டயலின்(அமைலேஸ்).

* டயலின் என்ற நொதியின் செயல் - ஸ்டார்ச்சின் மீது  செயல்பட்டுமால்டோசாக மாற்றுவது.

* சீரண மண்டலத்தின் எப்பகுதியில் புரதத்தின் செரித்தல் துவங்குகிறது –இரைப்பை.

* இரைப்பையில் உணவு தங்கியிருக்கும் நேரம் - சுமார் 4 மணி நேரம்.

* உணவில் உள்ள கொழுப்பை செரிப்பது - கல்லீரல் சுரக்கும் பித்த நீர்.

* புரதம் செரித்தலின் முடிவில் அமினோ அமிலங்களாக மாற்றமடைகிறது.

* கொழுப்பு செரித்தலின் முடிவில் கொழுப்பு அமிலம் மற்றும் கிளிசராலாகமாற்ற மடைகிறது.

* வயிற்றின் மேல்பகுதியின் பெயர் – கார்டியாக்.

* வயிற்றின் கீழ்பகுதியின் பெயர் – பைலோரிக்.

* மாடுகளின் இரைப்பையில் நான்கு அறைகள் உள்ளன.

* பறவைகளின் முன் கழுத்தில் உள்ள அமைப்பு – தீனிப்பை.

* மனித இதயத்தில் உள்ள அறைகளின் எண்ணிக்கை – நான்கு.

* இதயத்தைச் சுற்றியிருக்கும் உறையின் பெயர் – பெரிகார்டியம்.

* இதயத்தின் மேல் அறைகளின் பெயர் - ஆரிக்கிள் (அ) ஏட்ரியம்.

* இதயத்தின் கீழ் அறையின் பெயர் – வெண்ட்ரிக்கிள்

* சுத்த இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் – தமனி.

* இரத்த ஓட்டத்தினை முதன் முதலில் கண்டறிந்தவர் - வில்லியம் ஹார்வி(1678).

* இரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்கான நிறமி – ஹிமோகுளோபின்.

* ஒரு மனிதனின் சராசரி இதயத்துடிப்பு - நிமிடத்திற்கு 70-72.

* இதயத் துடிப்பைக் கண்டறிய உதவும் கருவி – ஸ்டெதஸ்கோப்.

* மீன்களின் இதயம் எத்தனை அறைகளால் ஆனது – இரண்டு.

* இருவாழ்விகளின் இதயம் எத்தனை அறைகளால் ஆனது - மூன்று(தவளை) .

* ஊர்வனவற்றின் இதயம் எத்தனை அறைகளைக் கொண்டது – இரண்டு ஆரிக்கிள் மற்றும் முழுவதுமாக பிரிக்கப்படாத இரண்டு வென்ட்ரிக்கிள்.

* பறவைகளிலும், பாலூட்டிகளிலும் இதயம் எத்தனை அறைகளால் ஆனது – நான்கு.

* புரதத்தின் வளர்சிதை மாற்றத்தினால் உண்டாகும் கழிவுப்பொருள் -நைட்ரஜன் கழிவுப்பொருள்.

* சிறுநீரகத்தில் செயல்படும் முக்கிய அலகு -நெ:ப்ரான்.

* நெ:ப்ரானில் காணப்படும் இரு பகுதிகள் - மால்பீஜியன் உறை, சிறுநீரகநுண்குழல்.

* ஒரு நாளைக்கு வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு - 1.5 முதல் 2 லிட்டர்வரை.

* பறவைகளின் உணவு எங்கு அரைக்கப்படுகிறது – அரைவைப்பை.

* இலைத்துளையின் இரு மருங்கிலும் காணப்படுவது - காப்புச் செல்கள்.

* தண்டில் உள்ள சிறு துளைகளின் பெயர் – லெண்டிசெல்.

* சூழ்நிலை என்ற சொல்லை உருவாக்கியவர் – ரெய்ட்டர்.

* சூழ்நிலை என்ற சொல்லை வரையறுத்தவர் - ஹெக்கல்(1869).

* சூழ்நிலைக் காரணிகளின் இரு வகைகள் - உயிர்க்காரணிகள், உயிரற்றகாரணிகள்.

* உயிர்க்காரணிகளின் மூன்று வகைகள் - உற்பத்தியாளர், நுகர்வோர்,சிதைப்பவை.

* சிதைப்பவைகளுக்கு உதாரணம் -பாக்டீரியா, காளான்கள்.

* ஊன் உண்ணிகளுக்கு உதாரணம் - நரி, ஓநாய், பாம்பு.

* அனைத்துண்ணிகளுக்கு உதாரணம் - நாய், மனிதன்.

* தாவர உண்ணிகளுக்கு உதாரணம் - மான், முயல், பசு.

* ஒரு உயிரினத்திலிருந்து மற்றொரு உயிரினத்திற்கு உணவாற்றல்மாற்றப்படுவது - உணவுச்சங்கிலி மூலம்.

* நீர்ப்பரப்பின் மீது மிதந்து வாழ்கின்ற தாவரத்திற்கு உதாரணம் –ஜக்கார்னியா.

* மண்ணில் வேரூன்றி நீரில் மூழ்கியுள்ள தாவரத்திற்கு உதாரணம் –வாஸ்நேரியா.

* நீரில் வேரூன்றி மிதக்கும் தாவரத்திற்கு உதாரணம் – நிம்ஃபியா.

* நீர் நில வாழ்வன தாவரங்களுக்கு உதாரணம் - லிம்னோபில்லா, ஹெட்டிரோபில்லா.

* தாவரத்தின் பகுதிகள் தசைப்பற்றுடையதாகவும், இலைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ள தாவரங்கள் எந்த சூழ்நிலையில் உயிர் வாழும் – வறள்நிலத்தாவரங்கள்.

* எலியின் மூலம் பரவும் நோய்களில் மிகவும் முக்கியமானது – பிளேக்.

* சுற்றுப்புறத் தூய்மையை பாதுகாக்கும் உயிரிகள் கழிவு நீக்கிகள் எனப்படுகின்றன.

* கழிவு நீரில் மாசு காட்டிகளாக வளர்வது - குளோரெல்லா, ஆகாயத் தாமரை.

* உடல் நல வாழிடங்கள் எனப்படுவது – மலைப்பிரதேசங்கள்.

* புல்வெளிப் பிரதேசங்களில் வாழும் விலங்குகளுக்கு உதாரணம் - காட்டெருமை, கலைமான்கள், வரிக்குதிரை, குருவி, கங்காரு.

* விலங்கு மிதவை உயிரிகளுக்கு உதாரணம் - கோபிபாடு, ரோடிபர், ஆஸ்ட்ரோகோடுகள்.

* வறள் நிலத்தாவரங்களுக்கு உதாரணம் - சப்பாத்தி, சவுக்கு, திருக்கள்ளி

* மறுசுழற்சி செய்யும் விலங்கினம் – மண்புழு.

* இலைகள் முட்களாக மாறியுள்ள தாவரத்திற்கு உதாரணம் –சப்பாத்திக்கள்ளி.

* இடைநிலத் தாவரத்திற்கு உதாரணம் – பலா.

* மூன்றாம் நிலை நுகர்வோருக்கு உதாரணம் – கழுகு.

* இரண்டாம் நிலை நுகர்வோருக்கு உதாரணம் – பாம்பு.

* வரிக்குதிரை காணப்படும் நில வாழிட சூழ்நிலை – புல்வெளிப்பிரதேசம்.

* பென்குயின்கள் காணப்படும் வாழிடம் – தூந்திரப்பிரதேசம்

* எலி ஒருமுறை போடும் குட்டிகளின் எண்ணிக்கை - 10-15.

* மழைநீருக்கு ஆதாரம் – காடுகள்.

* சூழ்நிலை பாதிப்படைவதற்கு முக்கியக் காரணம் – மக்கள்தொகை.

* மண்ணுக்கும் மண்புழுவுக்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்தவர் – சார்லஸ் டார்வின்.

* கழிவு நீரில் வாழும் கைராமமஸ் இளம் உயிரி சிதைப்பவைகளில்ஒன்றாகும்.

* பிளேக் நோய்க்கான கடத்தியாக செயல்படுவது – சீனோப்சில்லா.

* பிளேக் நோய்க்கு காரணமான பாக்டீரியா – எர்சினியாபெஸ்டிஸ்.

* இரப்பர் தாவரத்தின் தாவரவியல் பெயர் - இவியா பிரேசியன்சிஸ்.

* இரப்பர் தாவரத்தைக் கண்டுபிடித்தவர் - கிறிஸ்டோபர் கொலம்பஸ்.

* இரப்பர் தாவரரத்திலிருந்து கிடைக்கும் பொருளுக்கும் இர்ப்பர் பெயரிட்டவர்- ஜோசப் பிரிஸ்ட்லி.

* இரப்பர் தாவரத்தின் தாயகம் - தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் பள்ளத்தாக்கு.

* தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் அதிக நிலப்பரப்பில் இர்ப்பர் சாகுபடி நடை பெறுகிறது – கன்னியாகுமரி.

* இரப்பர் மரத்திலிருந்து கிடைக்கும் பால் போன்ற திரவத்தின் பெயர் -லேடக்ஸ்
* இட்லி பூவின் தாவரவியல் பெயர் – இக்சோரா.

* மகரந்தத் தூள் சூலக முடியை அடைவதன் பெயர் - மகரந்தச் சேர்க்கை.

* ஒரு மலரின் மகரந்தத் தூள் அதே மலரின் சூலகத்தை சென்றடைவதன்பெயர் - தன் மகரந்தச் சேர்க்கை.

* ஒரு மலரின் மகரந்தத் தூள் வேறு மலரின் சூலகத்தைச் சென்றடைவதன்பெயர் - அயல் மகரந்தச் சேர்க்கை.

* யூக்கா எனப்படும் தாவரத்தில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவது எதன்மூலம் - பூச்சிகளின் மூலம்.

* காற்றினால் பரவும் விதைகளுக்கு உதாரணம் - முருங்கை, பருத்தி, எருக்கு.

* நீரினால் பரவும் விதைகளுக்கு உதாரணம் – தேங்காய்.

* விலங்குகளினால் விதைகள் பரவுவதற்கு உதாரணம் – நாயுருவி.

* விலங்குகளின் கழிவின் மூலம் விதை பரவுதலுக்கு உதாரணம் - கருவேல்.

* ஆமணுக்கு, அவரை, எருக்கு, பருத்தி ஆகியவற்றின் விதைவெடித்துப் பரவுதல் மூலம் பரவுகிறது.

* அதிகம் பால் தரும் பசுக்களுக்கு உதாரணம் - நியோனி, கர்சிவப்பு மற்றும் சாகிவால்.

* பால் தரும் கலப்பின மசுக்களுக்கு உதாரணம் - ஜெரிசி, பிரௌன் சுவில்.

* அகார்-அகார் எந்த பாசியிலிருந்து பெறப்படுகிறது - தாவர சிசு, பாக்டீரியா, பூஞ்சைகள் வளர் ஊடகமாக ஆய்வகங்களில் பயன்படுகிறது.

* சர்க்கரை ஆலைகளில் திரவங்களை வடிகட்டவும், பெயிண்ட் தயாரிப்பிலும்பயன் படுவது – டையாட்டமைட்டு.

* உயிர்ம உரங்களாகப் பயன்படும் பாசி - நாஸ்டாக், அனபீனா.

* ஒரு செல் புரதம் தயாரிக்கப் பயன்படும் ஆல்காக்கள் - குளோரெல்லா, ஸ்பைரூலினா.

* சிறந்த உணவுக் காளான்களாக பயன்படுபவை - அகாரிகஸ், பைஸ்போரஸ், வால்வேரியல்லா, வல்வேசியா.

* மதுபான உற்பத்தியிலும், ரொட்டி உற்பத்தியிலும் பயன்படும் பூஞ்சை –ஈஸ்டு.

* வைட்டமின் ஏ குறைவினால் உருவாகும் நோயின் பெயர் – சிராப்தால்மியா.

* சளியை உண்டாக்குவது - 100க்கும் மேற்பட்ட வைரஸ்.

* மலச்சிக்கலைத் தீர்க்கத் தேவையான உணவுப் பொருள் - நார் உணவுப்பொருள்.

* உலகச் சுற்றுச் சூழல் தினம் - ஜூன் 5.

* கேரட், பப்பாளி போன்றவற்றில் காணப்படும் வைட்டமின் - வைட்டமின் ஏ.

* நீரின் மூலக்கூறு வாய்ப்பாடு - $H_2O$.

* உயிர் வாழ் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் 70 முதல் 90 சதவீதம் நீர் உள்ளது.

* புவிப் பரப்பில் 4/5 பங்கு நீர் உள்ளது.

* கருவேல மரத்தின் தாவரவியல் பெயர் - அக்கேசியா அராபிக்கா.

* வெள்ளைப் பூண்டின் தாவரவியல் பெயர் -அஸியம் சட்டைவம்.

* எருக்கு தாவரத்தின் தாவரவியல் பெயர் - கலோட்ரோபிஸ் ஜைஜாண்டியா.

* நித்திய கல்யாணியின் தாவரவியல் பெயர் - கேதரைன்தஸ் ரோசியஸ்.

* உடன் வெப்பம் தணிக்கவும், சிறுநீர் சர்க்கரையைக் குறைக்கவும் பயன்படும் தாவரம் - நித்திய கல்யாணி.

* இஞ்சி தாவரத்தின் தாவரவியல் பெயர் – ஜிஞ்சிபர்.

* வாயுக்கோளாறுக்கும், பித்த மிகுதியால் ஏற்படும் வாந்திக்கும் மருந்தாகபயன் படுவது – இஞ்சி.

* மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்தும் கீழா நெல்லி தாவரத்தின் தாவரவியல் பெயர் - பில்லான்தஸ் பிரேடர்னஸ்.

* டிஜிடாலிஸ் செடியிலிருந்து இதய நோய்க்கு மருந்து தயாரித்தவர் - டாக்டர்வில்லியம் வித்ரிங்.

* டிஜிடாலிஸ் செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்து இதய நோய்க்குப்பயன் படுகின்றது.

* விலங்கு நல வாரியத் தலைவராக தன் வாழ்நாள் முழுவதும்தொண்டாற்றியவர் - திருமதி அருண்டேல்.

* SPCA என்பதன் விரிவாக்கம் -Society for Prevention and Cruelty to Animals.

* SPCA இயற்றப்பட்ட ஆண்டு – 1980.

* நீர்வாழ் விலங்குகளின் உற்பத்திக்கு – அக்குவாகல்ச்சர்.

* அக்குவாகல்சரில் வளர்க்கப்படும் மீன்களின் பெயர்களுக்கு உதாரணம் - நிலாப்பியா,மொசாம்பிகா, முல்லெட், முகில், செபாலஸ், கட்லா.

* வைட்டமின் கே குறைவினால் உருவாகும் நோய் - இரத்தம் உறையாமை.

* வைட்டமின் பி குறைவினால் உருவாகும் நோய் – பெரிபெரி.

* வைட்டமின் பி6(பைரிடாக்சின்) குறைவினால் உருவாகும் நோய் - நரம்புத்தளர்ச்சி, அனிமியா.

* வைட்டமின் சி குறைவினால் உருவாகும் நோய் – ஸகர்வி.

* கேரட், பப்பாளி, மக்காச்சோளம் ஆகியவற்றில் காணப்படும் வைட்டமின் - வைட்டமின் ஏ.

* முட்டைகோஸ், காலிஃபிளவர் ஆகியவற்றில் காணப்படும் வைட்டமின் - வைட்டமின் கே.

* தீட்டப்படாத அரிசி, முழு தானியங்களில் காணப்படும் வைட்டமின் -வைட்டமின் பி1 (தையாமின்).

* தக்காளி, ஆரஞ்சு, ஆகியவற்றில் காணப்படும் வைட்டமின் - வைட்டமின் சி.

* தாவர விதைகளில் இருந்து வளரும் புறவாளரிகள் என்பது – மேற்பரப்புநார்கள்.

* தண்டு நார்களுக்கு உதாரணம் - சணல், மணிலா நார்.

* இலை நார்களுக்கு உதாரணம் - கற்றாழை நார்.

* மேற்பரப்பு நார்களுக்கு உதாரணம் – பருத்தி.

* வெளிக்காற்று பட்டவுடன் எளிதில் ஆவியாகிவிடும் எண்ணெய் – சோயா எண்ணெய்.

* இதய நோயாளிகளுக்கு எந்த எண்ணெய் மிகச்சிறந்தது - சூரிய காந்திஎண்ணெய்.

* வனஸ்பதி தயாரிக்க உதவும் எண்ணெய் - நிலக்கடலை எண்ணெய்.

* சிறந்த உயவு எண்ணெய் – ஆமணக்கு.

* மலமிளக்கியாகவும், சோப்பு தயாரிக்கவும் பயன்படும் எண்ணெய் - ஆமணக்கு எண்ணெய்.

* அழகுக்காக வளர்க்கப்படும் மீன்கள் சிலவற்றின் பெயர்கள் - கப்பீஸ்,பைட்டர், கௌராமி, பிளாக்மோலி, ஒயிட்மோலி, கோல்டன், ஏஞ்சல்.

* WHO - World Health Organization.

* பிறந்த குழந்தையின் எடை 3 கிலோகிராம் இருத்தல் வேண்டும்.

* ஆரோக்கியமான ஒரு வயது குழந்தையின் எடை - 8 கிலோகிராம்.

* புவிப்பரப்பில் உள்ள நீரின் அளவு - 1.4 ஆயிரம் மில்லியன் கன கிலோமீட்டர்.

* புவியில் தூய நீரின் அளவு - 3 சதவீதம்.

* மனித உடலில் நீரின் சதவீதம் - 65 சதவீதம்.

* தக்காளியில் நீரின் சதவீதம் - 95 சதவீதம்.

* உருளைக்கிழங்கில் நீரின் சதவீதம் - 80 சதவீதம்.

* நாள் ஒன்றுக்கு குடிநீராக பெண்ணுக்கு குறைந்த அளவு தேவைப்படும் நீர் - 1.5 லிட்டர் தூய நீர்.

* ஆண்களுக்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் குடிநீரின் அளவு - 2 லிட்டர்.

* ஒரு நபருக்கு தேவைப்படும் திரவ உணவு - 3.4 முதல் 4 லிட்டர்.

* நீரானது திரவ நிலையில் இருந்து திண்ம நிலைக்கு எந்த வெப்பநிலையில் மாற்றமடைகிறது - 0 டிகிரி செல்சியஸ்.

* திரவ நிலையில் உள்ள நீர் வாயு நிலைக்கு மாறுவது எந்த வெப்பநிலையில் மாற்றமடைகிறது - 100 டிகிரி செல்சியஸ்.

* நீரின் ஆவியாதலின் உள்ளுறை வெப்ப மதிப்பு - 537 கலோரி.

* நீரின் உருகுதலின் உள்ளுறை வெப்ப மதிப்பு - 79.7 கலோரி/கிராம்.

* ஒரு கிராம் பனிக்கட்டியானது 0 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நீராகமாறத் தேவைப்படும் வெப்ப ஆற்றல் என்பது - உருகுதலின் உள்ளுறைவெப்பம்.

* ஒரு கிராம் நீரின் வெப்பநிலையில் ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரிக்கத்தேவையான வெப்ப ஆற்றலின் அளவு - தன்வெப்ப ஏற்புத்திறன்.

* தன் வெப்ப ஏற்புத்திறனின் அலகு - ஜூல்/கிராம்/கெல்வின்.

* பெரும்பாலான பொருட்கள் கரைகின்ற காரணத்தால் நீரை சர்வ கரைப்பான் எனலாம்.

* கரைபொருளும் கரைப்பானும் சேர்ந்த ஒருபடித்தான் கலவையே – கரைசல்.

* நீரின் தன்வெப்ப ஏற்புத்திறனின் மதிப்பு - 4.184 ஜூல்/கிராம்/கெல்வின்.

* உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி ஆண்டு தோறும் எவ்வளவுமக்கள் குடிநீர் மாசுபடுலினால் இறக்கின்றனர் - 5 மில்லியன் மக்கள்.

* மாசு கலந்த நீரை மனிர்கள் உட்கொள்வதால் ஏற்படும் நோய்கள் –வயிற்றுப் போக்கு,சீதபேதி, மஞ்சள்காமாலை, காலரா, டைபாய்டு.

* நீரின் மூலக்கூறு நிறை – 18.

* நீரின் மூலக்கூறு வடிவம் - V வடிவம்.

* நீரில் ஹைட்ரஜன் ஆக்சிஜனின் எடை இயைபு விகிதம் - 1:8.

* நீரில் ஹைட்ரஜன் ஆக்சிஜன் கன அளவு இயைபு விகிதம் - 2:1.

* நீர் மூலக்கூறில் வேதியியல் பெயர் - ஹைட்ரஜன் மோனாக்சைடு அல்லது ஆக்சிஜன் ஹைட்ரைடு.

* நீரின் கன அளவு இயைபை கண்டறியும் சோதனையின் பெயர் – ஹாப்மன்முறை.

* நீரின் கன அளவு இயைபைக் கண்டறிய உதவும் உபகரணத்தின் பெயர் -ஹாப்மன் வோல்டா மீட்டர்.

* ஒரு வளிமண்டல அழுத்தத்தில் நீரின் உறைநிலை - 0 டிகிரி செல்சியஸ்.

* ஒரு வளிமண்டல அழுத்தத்தில் நீரின் கொதிநிலை - 100 டிகிரி செல்சியஸ்.

* தூய நீர் மின்னோட்டத்தைக் கடத்துமா – கடத்தாது.

* பனிக்கட்டி நீரில் மிதக்கக் காரணம் - 0 டிகிரி செல்சியசில் ஒருகுறிப்பிட்டநிறையை உடைய பனிக்கட்டியின் பருமன் அதே நிறையை உடைய நீரின்பருமனை விட அதிகம்.

* கடல்நீரில் உப்பின் சதவீதம் - 3.5 சதவீதம்.

* கடல் நீரில் அதிகமாகக் காணப்படுவது - சோடியம் குளோரைடு (2.8 சதவீதம்).

* கடல்நீரிலிருந்து உப்புக்கள் எந்த முறையின் மூலம் தயாரிக்கப்படுகிறது - ஆவியாதல் முறையின் மூலம்.

* அயோடின் பற்றாக்குறையால் உருவாகும் நோய் - முன் கழுத்து கழலை.

* கடல் நீரிலிருந்து தூய நீர் எந்த முறையின் மூலம் பெறப்படுகிறது - எதிர்சவ்வூடு பரவல் முறை.

* நீரேற்று நிலையங்களில் நீரில் உள்ள கசடுகளை வீழ்படிவாக்குவதற்காகநீருடன் சேர்க்கப்படும் வேதிப்பொருள் - பொட்டாஷ் படிகாரம் மற்றும்சுண்ணாம்பு.

* நீரின் மிகப்பெரிய இயற்கை ஆதாரம் – கடல்.

* நீரின் அடர்த்தி அதன் பருமனுக்கு எதிர் விகிதத்தில் உள்ளது.

* ஹாப்மன் வோல்டா மீட்டரில் நீரை மின்னாற்பகுக்க எதிர்மின்வாயில் ஹைட்ரஜன் வாயும், நேர் மின்வாயில் ஆக்சிஜன் வாயுவும் சேகரமாகும்.

* நீர் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகிய இரு தனிமங்களால் ஆனது என்று கண்டறிந்தவர் - ஏ.எல்.லவாய்சியர் (1783).

* இரு கன அளவு ஹைட்ரஜனும், ஒரு கன அளவு ஆக்சிஜனும் சேர்ந்தகலவையை எரித்து நீரைத் தயாரித்தவர் - ஹென்றி காவண்டிஷ் (1781).

* உள்ளுறை வெப்பத்தின் அலகு - கலோரி/கிராம்.

* நுண்ணுயிரிக் கொல்லியாகப் பயன்படுவது - சலவைத் தூள்.

* உறையும்போது கன அளவு அதிகரிக்கும் பொருள் – நீர்.

* இந்தியாவில் நீர் மாசுபாடு அடைந்திருப்பதன் சதவீதம் - 70 சதவீதம்.

* அமிலம் கலந்த நீரை மின்னாற்பகுக்கும்போது ஹைட்ரஜனும்,ஆக்சிஜனும் கிடைக்கிறது.

* நீரின் மூன்று நிலைகள் - திட, திரவ, வாயு.

*4 டிகிரி செல்சியத்தில் நீரின் அடர்த்தி 1 கிராம்/கன சென்டிமீட்டர் என்றால்பனிக் கட்டியின் அடர்த்தி - 0.91 கிராம்/கன சென்மீட்டர்.

* தண்ணீரைப் பற்றியும் அதன் விரவலைப் பற்றியும் படிக்கும் அறிவியல்பிரிவு - நீரியல் (ஹைட்ராலஜி).

* தொழிற்சாலைக் கழிவுகளில் உள்ள கரிம மாசுக்களை காற்றில் உள்ள பாக்டீரியாக்களைக் கொண்டு சிதைந்த பின்னரே அக்கழிவுகளைவெளியேற்ற வேண்டும்.

* கதிர்வீச்சுக் கழிவுகளை கான்கிரீட் பெட்டகங்களில் வைத்து கடலில் போட வேண்டும்.

* உள்ளுறை வெப்பத்தின் அலகு - கலோரி/கிராம்.

* நீர்கோளத்தில் குடிப்பதற்கு ஏற்ற நீரின் சதவீதம் - 1 சதவீதம்.

* ஆறு, ஏரி மற்றும் பனிமலைகளில் அடங்கியுள்ள நீரின் சதவீதம் - 2.7சதவீதம்.

* தனக்கென்று ஒரு குறிப்பிட்ட நிறையையும் பருமனையும் பொருள் பெற்றுள்ளது.

* திண்மம் என்பது - குறிப்பிட்ட பருமனையும் குறிப்பிட்ட வடிவமும் உடையது.

* குறிப்பிட்ட பருமனும், குறிப்பிட்ட வடிவமற்றதும் திரவம் ஆகும்.

* குறிப்பிட்ட இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ளாததும், வடிவமற்றதும் வாயு ஆகும்.

* மூலக்கூறுக்களுக்கிடையேயான கவர்ச்சி விசை திண்மப் பொருளில்அதிகமாக இருக்கும்.

* மூலக்கூறுகளுக்கிடையேயான கவர்ச்சி விசை மிகவும்புறக்கணிக்கத் தக்கதாக இருப்பது – வாயுப்பொருளில்.

* திடப்பொருளானது சூடேற்றப்படும்போது திரவப்பொருளாக மாறுவது உருகுதல் எனப்படும்.

* பணிக்கட்டியின் உருகுநிலை - 0 டிகிரி செல்சியஸ்.

* எந்த வெப்பநிலையில் திரவமானது கொதிக்க ஆரம்பிக்கிறதோ, அதுவே அதிரவத்தின் கொதிநிலை எனப்படும்.

* நீரின் கொதிநிலை - 100 டிகிரி செல்சியஸ்.

* திரவப்பொருளைச் சூடேர்றும்போது அது வாயுவாக மாறுவது ஆவியாதல் எனப்படும்

* ஒரு திடப்பொருள் நேரடியாக வாயுநிலைக்கு மாறுவது பதங்கமாதல் எனப்படும்.

* பதங்கமாதலுக்கு எடுத்துக்காட்டு - கற்பூரம், அயோடின், அம்மோனியம் குளோரைடு.

* ஒரு வாயு திரவமாக மாறுதல் ஆவி சருங்கி நீர்மமாதல்.

* திரவப்பொருள் குளிர்விக்கப்படும்பொழுது திடப்பொருளாக மாறும் நிகழ்ச்சி உறைதல் எனப்படும்.

* ஒரே விதமான அணுக்கள் அல்லது மூலக்கூறுகளால் தனிமம் உருவாக்கப்பட்டது.

* இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தனிமங்களின் எண்ணிக்கை – 112.

* தீமை விளைவிக்கக்கூடிய கதிர்களை உமிழும் தனிமங்கள் கதிரியக்கத் தனிமங்கள் என அழைக்கப்படுகின்றன.

* கதிரியக்கத் தனிமங்களின் எண்ணிக்கை – 30.

* தனிமத்தின் மிகச்சிறிய அலகு – அணு.

* அணுவில் உள்ள பிரிக்கக்கூடிய துகள்கள் –புரோட்டான்கள், நியூட்ரான்கள்,எலெக்ட்ரான்கள்.

* பொருளின் இயற்பியல் மற்றும் வேதியியல் தன்மைகளைக் காட்டும் ஒரு பொருளின் மிகச்சிறிய அலகிற்கு மூலக்கூறு என்று பெயர்

* ஈரணு மூலக்கூறுகளுக்கு எடுத்துக்காட்டு - ஹைட்ரஜன் முலக்கூறு, ஆக்சிஜன் மூலக்கூறு, குளோரின் மூலக்கூறு, நைட்ரஜன் மூலக்கூறு.

* மூவணு மூலக்கூறுகளுக்கு எடுத்துக்காட்டு – ஓசோன்.

* ஒரணு தனிமங்களுக்கு எடுத்துக்காட்டு - தாமிரம், சில்வர்.

* பொட்டாசியத்தின் இலத்தீன் பெயர் – காலியம்.

* சோடியத்தின் இலத்தீன் பெயர் – நேட்ரீயம்.

* இரும்பின் இலத்தீன் பெயர் – ஃபெர்ரம்.

* டின் தனிமத்தின் இலத்தீன் பெயர் – ஸ்டான்னம்.

* காரீயத்தின் இலத்தீன் பெயர் – ப்ளம்பம்.

* தாமிரத்தின்(காப்பர்) இலத்தீன் பெயர் – குப்ரம்.

* மெர்க்குரியின் (பாதரசம்) இலத்தீன் பெயர் – ஹைட்ரார்ஜிரம்.

* சில்வர்(வெள்ளி) இலத்தீன் பெயர் – அர்ஜெண்டம்.

* தங்கத்தின் (கோல்டு) இலத்தீன் பெயர் – ஆரம்.

* டங்ஸ்டனின் இலத்தீன் பெயர் – உல்ஃப்ரம்.

* ஆண்டிமனியின் இலத்தீன் பெயர் – ஸ்டிபியம்.

* இரும்பைத் தங்கமாக மாற்றும் கலை அல்கெமி என அழைக்கப்படுகிறது.

* டோமியோ என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் - பிரி அல்லது உடை.

* அணு என்ற சொல்லுக்கு பிரிக்க இயலாத என்று பொருள்.

* மண்ணின் வேதிப்பெயர் - சிலிக்கன் டை ஆக்சைடு.

* சலவை சோடாவின் வேதிப்பெயர் - சோடியம் கார்பனேட்.

* ரொட்டி சோடாவின் வேதிப்பெயர் - சோடியம் பை கார்பனேட்.

* சலவைத் தூளின் வேதிப்பெயர் - கால்சியம் ஆக்சி குளோரைடு.

* சாதாரண உப்பின் வேதிப்பெயர் - சோடியம் குளோரைடு.

* பி.வி.சி. பிளாஸ்டிக் என்பது - பாலி வினைல் குளோரைடு.

* கிருமி நாசினியாகவும், நுண்ணுயிர் கொல்லியாகவும் பயன்படுவது – சலவைத்தூள்.

* தீயணைக்கும் கருவியில் பயன்படுவது - சோடியம் பை கார்பனேட்.

* வயிற்றில் உள்ள அமிலத்தன்மையை நடுநிலையாக்கல் செய்து அஜீரணக் கோளாறுகளை நீக்குவது - சோடியம் பை கார்பனேட்.

* கேக், பிரெட் போன்ற ரொட்டிகள் தயாரிக்கும்பொழுது அவற்றை உப்பச்செய்து மிருதுவாக்கும் வாயு - கார்பன் டை ஆக்சைடு.

* அனைத்து தனிமங்களும் மேலும் பிளக்க முடியாத அணுக்கள் என்றுஅழைக்கப் படும் சிறு துகள்களால் ஆனது என்று குறிப்பிட்டவர் – ஜான்டால்டன்.

* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமங்கள் ஒரு குறிப்பிட்ட நிறைவிகிதத்தில் இணைந்து உருவான பொருள் சேர்மம் எனப்படும்.

* சேர்மங்களுக்கு எடுத்துக்காட்டு - கார்பன் டை ஆக்சைடு, நீர், குளோரோஃபில்.

* மண்ணின் வேதிப்பெயர் - சிலிக்கன் டை ஆக்சைடு.

* நீற்றுச் சுண்ணாம்பு என்பது - கால்சியம் ஹைட்ராக்சையடு.

* கலப்பின உப்பிற்கு எடுத்துக்காட்டு – சலவைத்தூள்.

* நிறமற்ற உப்புக்களுக்கு எடுத்துக்காட்டு –சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு.

* ஃபெர்ரஸ் சல்பேட் உப்பின் நிறம் - இளம் பச்சை.

* காப்பர் சல்பேட், பொட்டாசியம் டை குரோமைட் ஆகிய உப்புகளின் நிறம் - நீலம் மற்றும் ஆரஞ்சு, சிவப்பு நிறம்.

* சுண்ணாம்புக்கல்லின் வேதிப்பெயர் - கால்சியம் கார்பனேட்.

* பொட்டாசியம் நைட்ரேட்டின் பொதுப்பெயர் – நைட்டர்.

* சோடியம் நைட்ரேட்டின் பொதுப்பெயர் - சிலி சால்ட் பீட்டர்.

* ஹைப்போ என்பது - சோடியம் தயோ சல்பேட்.

* மயில் துத்தம் என்பது - நீரேற்றப்பட்ட காப்பர் சல்பேட்.

* பச்சைவிட்ரியால்(பச்சை துத்தம்) என்பது நீரேற்றப்பட்ட ஃபெர்ரஸ் சல்பேட்.

* வெள்ளை விட்ரியாஸ் (வெண் துத்தம்) என்பது - நீரேற்றப்பட்ட ஜிங்க்சல்பேட்.

* முகரும் உப்பு என்பது - அம்மோனியம் கார்பனேட்.

* எப்சம் உப்பு என்பது - நீரேற்றப்பட்ட மெக்னீசியம் சல்பேட்.

* பாரிஸ் சாந்து என்பதன் வேதிப்பெயர் - நீரேற்றப்பட்ட ஜிங்க் சல்பேட்.

* ரொட்டி தயாரிக்கப் பயன்படும் பேக்கிங் பவுடர் தயாரிக்க பயன்படுவது - சோடியம் பை கார்பனேட்.

* பேக்கிங் பவுடரில் கலந்துள்ள கலவை - சோடியம் பை கார்பனேட், டார்டாரிக்அமிலம்.

* சலவைத் தொழில் சலவை சோடாவாகப் பயன்படுவது – சோடியம்கார்பனேட்.

* பலவித உலர்ந்த சோப்பு பவுடர்களில் முக்கியப் பகுதிப்பொருளாக உள்ளது - சோடியம் கார்பனேட்.

* கடின நீரை மன்னீராக்கப் பயன்படுவது - சோடியம் கார்பனேட்.

* எரிசோடா, வாஷிங் சோடா, சலவை சோடா போன்ற சோடிய சேர்மங்கள்தயாரிக்க மூலப்பொருளாகப் பயன்படுவது - சோடியம் குளோரைடு.

* உறைகலவை என்பது - பனிக்கட்டி + சோடியம் குளோரைடு.

* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூய பொருட்கள் எந்த விகிதத்திலும் கலந்திருப்பது கலவை ஆகும்.

* ஒருபடித்தான கலவைக்கு எடுத்துக்காட்டு – காற்று.

* பலபடித்தான கலவைக்கு எடுத்துக்காட்டு - மரத்தூள், இரும்புத்தூள், சாதாரண உப்பு.

* கார்பன் துகள்களும், காற்றும் கலந்த கலவை புகை எனப்படும்.

* ஆக்சிஜன், நைட்ரஜன், கார்பன் டை ஆக்சைடு, நீராவி கலந்த கலவை - காற்று ஆகும்.

* எரிதலுக்கு துணை புரியும் வாயு – ஆக்சிஜன்.

* சோடியம் பால்மிடேட் என்பது – சோப்பு.

* w என்ற குறியீடு எத்தனிமத்தைக் குறிக்கும் – டங்ஸ்டன்.

* உரமாகப் பயன்படுவது - அம்மோனியம் பாஸ்பேட்.

* ஒரு கந்தக மூலக்கூறில் அடங்கியுள்ள கந்தக அணுக்களின் எண்ணிக்கை – 8

* Sio2 - ன் வேதிப்பெயர் – மண்.

* பியூட்டேன் மற்றும் பென்டேன் வாயுக்களின் கலவையே சமையல் வாயு ஆகும்.

* எலும்பு மற்றும் பற்களில் உள்ள தனிமம் - கால்சியம் பாஸ்பேட்.

* அசிடஸ் என்ற இலத்தீன் மொழிச்சொல்லின் பொருள் – அமிலம்.

* நீரில் கரைக்கப்படும் பொழுது ஹைட்ரஜன் அயனிகளைக் கொடுப்பது அமிலம்

எனப்படும்.

* தாவரங்களிலிருந்து விலங்குகளிலிருந்தும் பெறப்படும் அமிலங்கள் கரிமஅமிலங்கள் எனப்படும்.

* தாதுப் பொருட்களில் இருந்து பெறப்படும் அமிலங்கள் கனிம அமிலங்கள் எனப்படும்.

* மியூட்ரியாட்டிக் அமிலத்தின் வேதிப்பெயர் - ஹைட்ரோகுளோரிக் அமிலம்

* வேதிப்பொருட்களின் ராஜா எனப்படுவது - கந்தக அமிலம்(சல்பியூரிக்அமிலம்)

* நைட்ரிக் அமிலத்தின் பொதுப் பெயர் -அக்குவா ஃபோர்டிஸ்.

* சிட்ரஸ் பழங்களில் காணப்படும் அமிலம் - சிட்ரிக் அமிலம்.